சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 135/2021

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனி | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜகோபால் | ஜாதி | |
| கிராமம் | குன்னத்தூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**21.08.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, பட்டா நெம்பர் 1-க் கான அசல் பட்டா புத்தகம் **வா.சா.ஆ.1,** 24.07.2018 தேதியிட்ட நத்தம் நில வரி திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் **வா.சா.ஆ.2,** 07.10.2017 தேதியிட்ட அ- பதிவேட்டு உண்மை நகல் **வா.சா.ஆ.3,** 07.10.2017 தேதியிட்ட வி.எல்.ஆர் பதிவேட்டு உண்மை நகல் **வா.சா.ஆ.4,** எ.பி.21/2019 மேல்முறையீட்டு மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட 19.03.2020 தேதியிட்ட இந்து அறநிலைய துறை ஆணையர் உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5.** மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.